
# மனிதன்

## மாபெரும் அதிசயப் படைப்பு



கடவுளால் கூடாத காரியம் ஒன்றுமில்லை !

– பைபிள்

# மனிதன்
## மாபெரும் அதிசயப் படைப்பு

மனுஷனுடைய சரீரத்துக்கு ஒப்பாக இன்று அநேக அதிசயங்கள் உலகத்தில் இருக்கின்றது. இன்று மனிதன் கண்டுபிடித்த எல்லா கண்டுபிடிப்புகளும் மனித சரீரத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது அவைகள் ஒன்றுமில்லை.

- ❖ சரீரம் 206 எலும்புகளைக் கொண்டுள்ளது.
- ❖ சராசரி 2500 கலோரி வெப்பம் மனித சரீரத்தில் தினமும் உற்பத்தியாகிக் கொண்டிருக்கிறது.
- ❖ மனிதன் குளிர்சாதனப் பெட்டியைக் (Refrigerator) கண்டுபிடிக்கும் முன்னமே, மனித சரீரத்தில் அது உள்ளது. சரீரத்தில் அதிக வெப்பம் உண்டாகின்றபோது அது இயற்கையாகவே வேலை செய்து சாதாரண நிலைக்கு மனிதனைக் கொண்டு வருகிறது.
- ❖ மனிதன், இதுவரை கண்டுபிடிக்காத தன்மையுடைய புகைப்படக் கருவி (Camera) மனித கண்களில் உள்ளது.
- ❖ 'Stereophonic System' மனிதன் கண்டு பிடிக்கும் முன்னே அது, அவன் காதுகளில் பொருத்தப்பட்டுள்ளது.
- ❖ 30 இலட்சத்துக்கும் மேற்பட்ட மூளை அணுக்கள் மனித மூளையில் உள்ளது. அவைகள் ஒவ்வொன்றும் 0.07 Volts மின்சாரத்தை உற்பத்தி செய்து கொண்டு வருகிறது.
- ❖ ஏறக்குறைய 1000 இரத்தக்குழாய்கள் மனிதசரீரத்தில் உள்ளது. 1,00,000 மைல்களுக்கும் அதிக நீளமுள்ள

குழாய்கள் மூலம் இரத்தத்தை இருதயமானது PUMP பண்ணிக் கொண்டு வருகிறது.

இவ்விதமாய் மனித சரீரம் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டிருக்கிறது. மனிதன் என்பவன் **சரீரம்** மாத்திரம் கொண்டவன் அல்ல. சரீரத்திற்குள்ளே **ஆத்துமாவும், ஆவியும்** இருக்கின்றது. மனிதனில் உள்ள ஆவி, அவனை மற்ற உயிரினங்களைக் காட்டிலும் விசேஷித்தவனாக்குகிறது.

சரீரத்தை மாத்திரம் அழிக்க வல்லவனுக்குப் பயப்பட வேண்டாம். சரீரத்தையும் ஆத்துமாவையும் நரகத்தில் அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள் என்றார் இயேசு (லூக். 12:5). சரீரம் இவ்வளவு பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டிருந்தாலும், காலையில் பூத்து மாலையில் வாடிப்போகும் பூவைப்போல அது மண்ணோடு சேர்கிறது. மண்ணுக்குத் திரும்புகிற சரீரத்தை இத்தகைய அதிசயமாய் தேவன் உண்டாக்கியிருப்பாரேயானால், என்றும் அழியாத ஆத்துமாவை எவ்வளவு அதிசயமாய் உண்டாக்கியிருப்பார் என்பதை சிந்தித்துப் பாருங்கள் !

சரீரத்தைப் பார்க்கிலும் ஆத்துமா முக்கியமாய் இருக்கிறது. இந்த முழு உலகத்தைப் பார்க்கிலும் ஆத்துமா முக்கியமாய் இருக்கிறது, (மத். 16:26). ஆவி இல்லாவிட்டால் சரீரம் இயங்காது (யாக் 2:26). ஆவியும் ஆத்துமாவும் தேவ சாயலில் உண்டாக்கப்பட்டிருக்கிறது (ஆதி 1:26). இந்த ஆத்துமாவானது மிகவும் அதிசயமாய் இருக்கின்றது. மனிதனுக்கு மகிமையைத் தருவது மனிதனிலுள்ள ஆத்துமாதான்.

இந்த ஆத்துமாவானது தன் சிறப்புகளை பாவத்தின் நிமித்தம் இழந்து விட்டது. தேவ மகிமையை மனிதன் இழந்து

போனான். தேவ சாயலாய் மகிமையில் இருந்தபோது தேவனோடு ஐக்கியமாக இருந்தான். பாவத்தினால் தேவமகிமையை இழந்தபோது அந்த ஐக்கியத்தை இழந்து விட்டான். மத, இன வேற்றுமையின்றி எல்லா மனிதர்களும் பாவம் செய்து தேவ மகிமையை இழந்துவிட்டனர். இழந்துபோன மகிமையைத் திரும்பப் பெறுவது எவ்வாறு? துண்டிக்கப்பட்ட ஐக்கியத்தைத் திரும்பப் பெறுவது எப்படி?

வீட்டுக்கு உபயோகமான பொருள் ஒன்று பழுதடைந்தால், அதை பழுது பார்ப்பதில்லையா? சரீரத்துக்கு வியாதி ஏற்பட்டால் சிகிச்சை செய்து அதை சரிசெய்து கொள்வதில்லையா? நமது சரீரம் முக்கியமானதால் சில சமயங்களில் நம்முடைய அத்தியாவசியமான பொருட்களையும் விற்று, நம் சரீரத்தை சரி செய்து கொள்கிறோமே! இப்படியிருக்க சரீரத்தைக் காட்டிலும் விசேஷமாய் இருக்கும் ஆத்துமாவில் உள்ள குறைகளை சரிசெய்து கொள்ள நீங்கள் எப்போதாவது சிந்தித்ததுண்டா?

நமது பொருட்களையும் சரீரத்தையும் இழக்க நேரிட்டாலும், நமது ஆத்துமாவை சரிசெய்ய வேண்டியது அவசியம் அல்லவா? நமது பொருட்களையும் சரீரத்தையும் சரிசெய்ய டாக்டரிடத்தில் செல்கிறோம். அதேப்போல நமது ஆத்துமாவிலுள்ள குறைகளை சரிசெய்ய அதனை உண்டாக்கினவரிடத்தில் செல்ல வேண்டுமல்லவா? இழந்து போனதை இரட்சிக்க வந்த இயேசுவே அதை சரிசெய்ய வல்லவர்.

**அநேகர் நினைப்பதுபோல இயேசு ஒரு குறிப்பிட்ட மதத்தினருக்காக (கிறிஸ்தவர்களுக்கு) மாத்திரம் வரவில்லை. அவர் முழு உலகத்தாருக்காகவும் வந்தார் (யோவான் 3:16); அவர் எல்லோரையும் நேசிக்கிறார். எல்லோருக்காகவும் மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, இயேசு உயிர்த்தெழுந்தார்.**

நமது ஆத்துமாவிலுள்ள குறைகளை சரிசெய்ய, இயேசு தமது இரத்தத்தை சிந்தும்படியாக தன்னையே பலியாக கொடுத்தார் (1யோவான் 1:7; 3:16). நாம் நீதிமான்களாக்கப் படுவதற்காக உயிர்த்தெழுந்திருக்கிறார் (ரோமர் 4:25). இதைத்தான் நாம் சுவிசேஷம் என்கிறோம்.

இந்த நற்செய்திக்கு கீழ்ப்படிந்தால் மாத்திரமே நமது ஆத்துமாவிலுள்ள குறைகள் சரியாகும். அதாவது நாம் இயேசுவை ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று **விசுவாசித்து,** நமது பாவங்களை விட்டு **மனந்திரும்பி,** கிறிஸ்துவிலுள்ள விசுவாசத்தை **அறிக்கை செய்து, ஞானஸ்நானம்** பெறும்போது, நமது ஆத்துமாவிலுள்ள குறைகள் சரிசெய்யப்படுகிறது.

உங்கள் ஆத்துமாவிலுள்ள குறைகள் சரிசெய்ய எப்போதாவது நீங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்துக்கு கீழ்படிந்ததுண்டா?

சரீர வியாதிக்கு சரியான மருத்துவரை பார்த்தால்தான் சரியான சிகிச்சைபெற்று சுகமாக முடியும். அதுபோல, பொருட்கள் பழுதானால் உரிய இடத்தில் கொடுத்து சரிசெய்வதுபோல, உங்கள் ஆத்துமா பாவமன்னிப்பை பெற்று சரிசெய்யப்பட, சரியான சத்தியத்தைப் போதிக்கிற, “கிறிஸ்துவின் சபையில்” விசாரித்துக் கீழ்படியுங்கள். உங்களுக்கு உதவி செய்ய நாங்கள் ஆயத்தமாக இருக்கிறோம்.

நீங்கள் விரும்பினால் உங்கள் ஆத்துமா பாவத்திலிருந்து சுகமடைய நாங்கள் உதவுகிறோம்! உடனே எங்களிடம் உங்கள் தெளிவான முகவரியை எழுதி இலவச புத்தகத்தைப் பெற்றுக்கொள்ளவும்.

**நீங்கள் இரட்சிக்கப்பட வேண்டும் என்பது தேவனுடைய சித்தமாயிருக்கிறது (1 தீமோ 2:4)**

- சுவிஷேசத்தைக் கேள்விப்பட வேண்டும். (எபே 1:13)
- இயேசுவை தேவகுமாரன் என்று விசுவாசிக்க வேண்டும். (யோ 20:31)
- பாவ வாழ்வை விட்டு மனந்திரும்ப வேண்டும். (அப் 17:30)
- விசுவாசத்தை வாயினாலே அறிக்கையிட வேண்டும். (ரோ 10:9)
- பாவமன்னிப்பிற்கென்று ஞானஸ்நானம் பெற வேண்டும். (அப் 2:38)
- அப்பொழுது விடுதலை, மகிழ்ச்சி, இரட்சிப்பு பெறுங்கள். (அப் 8:39)
- இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் சபையில் சேர்க்கிறார். (அப் 2:47)


தமிழ், ஆங்கில தபால்வழி பைபிள் பாடங்கள், பத்திரிக்கைகள் பெற

**கிருபையுள்ள வார்த்தை**

45 C/1, சர்ச் சந்து, காரனேசன் தெரு, அரசரடி

மதுரை – 625 016. போன் : 92 4421 4421, 92 4431 4431

Email : obey2jesus@gmail.com


**கிருபையுள்ள வார்த்தை T.V. நிகழ்ச்சி**

**புதுயுகம் T.V.** செவ்வாய்க்கிழமை காலை 6–15 மணி

இப்பகுதியில் எங்களுடன் தொடர்பு கொள்ள :

YOU TUBE LINK:
KIRUBAIYULL VAARTHAI